2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிக்கைகள்.

திரு .உ. ரா. வரதராசன் : தலைவர் அவர்களே, 5–4–1990 அன்று இங்கே வருவாயத் துறை அமைச்சர் அவர்கள் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்குப் பதில் அளித்துப் பேசுகிறபோது அவைக்குத் தந்த சில தவறான தகவல்கள் பற்றி விதி எண் 78-ன்கீழ் ஒரு மணி நேரம் விவாதம் வேண்டுமென்று தங்களைக் கோரி கடிதம் கொடுத்திருந்தேன். இதேபோன்று விதி எண் 74, 78-ன்கீழ் வேறு ஒரு பிரச்சினையை காங்கிரஸ், அ.இ.அ.தி.மு.க. நண்பர்கள் கொடுத்திருக்கிறார்கள்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள், இது போன்று கொடுத்துவிட்டு நான் அதில் முடிவெடுத்து அறிவிக்கிற வரையில் நீங்கள் அருள்கூர்ந்து பொறுமை காட்ட வேண்டும். இப்படி ஒவ்வொன்றையும் நான் கொடுத்திருக்கிறேன், அது என்னவாயிற்று என்று கேட்டால் எந்த விவரத்தையும் சொல்ல முடியாது. எந்த வேலையும் செய்ய முடியாது. இது நான் முடிவெடுத்த பிறகு சொல்ல வேண்டியது. அது ஆய்விலே உள்ளது. நீங்கள் உட்காருங்கள்.

திரு. கோ. வீரையன் : தலைவர் அவர்களே, 5 ஆம் தேதி கொடுத்த............

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; 78-வது விதியின் கீழ் கொடுத்ததை எல்லாம் நான் பார்த்து, முடிவு செய்துதான் சொல்ல முடியும். அதிலே தேதிக் கணக்கு கிடையாது.

திரு. கோ. வீரையன் ; தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஒரு பிரச்சினையாகி இருக்கிறது. அமைச்சர் அவர்கள் தவறாக ஒரு தகவலைக் கொடுத்திருக்கிறார்கள்..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வீரையன் அவர்களுக்கு நான் சொல்ல விரும்புவது, இதுபோன்று 78 மற்றும் சில விதிகளின்கீழ் கொடுக்கப்படுகிறவை என்னுடைய ஆய்வில் இருந்து வருபவை. நான் எடுத்துக்கொள்கிறபோது தான் எடுத்துக் கொள்ள முடியுமே தவிர, உடனடியாக, தேதிக் கணக்கை வைத்து, மூன்று நாட்களுக்குள் எடுக்கவேண்டும், இரண்டு நாட்களுக்குள் எடுக்கவேண்டும் என்று எடுக்க முடியாது, அதற்கு விதியிலே இடமில்லை என்பதை உணர்த்த விரும்புகிறேன்.